# இந்து சமயத்தில் நாகத்தொன்மம்

**ச.மதுராஜினி**[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*நாகம் இந்துசமய மரபின் தொன்மம் சார் வழிபாட்டு அடையாளமாகக் காணப்படுகிறது. ஆதிகாலத்தில் இயற்கை வழிபாடானது அச்சம் மற்றும் பக்தி உணர்வு காரணமாகத் தோற்றம் பெற்றாலும் பிற்காலத்தில் இயற்கை மீதுகொண்ட நம்பிக்கையே வழிபாடுகள் தோன்றுவதற்குக் காரணமாயின. அவ்வகையில் நாக வழிபாடானது விலங்கு வழிபாட்டின் தோற்றமாகக் காணப்படுகிறது. ஆதி மனிதன் நாக பாம்பில் மகோன்னதமான தெய்வசக்தி பொருந்தியுள்ளது என்பதை உணர்ந்து அதனை வழிபடத்தொடங்கினான். நாகமானது எவ்வாறு நிலத்தில் ஊர்வதால் மண், வளம் பெறுகிறதோ அவ்வாறே நாகத்தை மனிதன் வணங்குவதால் அவன் வாழ்வும் வளம் பெறுகிறது. ஒரு மனிதனுக்கு வாழ்வின் முக்கிய அம்சம் திருமணமும், குழந்தை பேறும் ஆகும். இந்த இரண்டினதும் முக்கிய தெய்வமாக நாக தேவதை காணப்படுகிறாள். குழந்தைப் பேறு இல்லாதவர்கள் நாகத்தினை வழிபட்டால் அவர்களுக்கு குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையே நாக வழிபாட்டை உலகெங்கும் பரவச்செய்தது. பொதுவாக நாக தோசம் இருப்பவர்க்கே திருமணத்தடைகள் காணப்படும். அவர்கள் பல காலம் குழந்தைப் பாக்கியம் இல்லாமலும் காணப்படுவார்கள். அத்தகையோர் நாகத்தினை வழிபடுவதன் மூலம் அத்தோசங்கள் நீங்கப்பெற்று நல்வாழ்வு பெறுவர். சித்தர்கள் கூட தமது கூடு விட்டு கூடுபாயும் சக்தியை நாகம் மற்றும் காக்கைகளில் தான் பிரயோகிக்கலாம் என கூறியுள்ளனர். அந்தளவிற்கு நாகமானது சக்தி வாய்ந்த ஒன்றாக காணப்படுகிறது. அத்தகைய நாக வழிபாட்டின் தொன்மையினையும் சிறப்பினையும் ஆராய்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. இவ்வகையில் நாகவழிபாடானது ஆதிகாலம் தொட்டு நிலவி வருகின்றது. இவ் நாக வழிபாட்டின் தொன்மம்யாது? இந்து மரபில் அது சிறந்தோங்குவதற்கான சிறப்பியல்களை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வானது நாக வழிபாட்டின் தொன்மம் பற்றி அறிகையில் வரலாற்று ரீதியான ஆய்வாகவும் அடிப்படையில் விவரண ஆய்வாகவும் ஆய்வின் தேவைகருதி பகுப்பாய்வாகவும் உள்ளது. இவ்வகையில் இந்நாக வழிபாடுதென்னாசியாவின்பழங்குடிமக்களின் வாழ்வோடு இணைந்த வழிபாடாக தோற்றம் பெற்று அன்றுதொட்டு தென்னாசிய நாகரிகத்தில் செல்வாக்கு செலுத்திவரும் ஒரு வழிபாடாக இருந்துவருவதைக் கண்டுகொள்ள முடிகிறது.*

**திறவுச்சொற்கள் :** தொன்மம், நாகவழிபாடு, நாகதோசம், வம்ச விருத்தி, இந்துசமயம்

[1]இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mathuramathu829@gmail.com

**ஆய்வின் அறிமுகம்**

உலகளாவிய ரீதியில் கடவுள் நம்பிக்கை வழிபாடு பூசை ஆகியவற்றைப் பொறுத்த அளவில் அவை அச்ச அடிப்படையிலும் அன்பு அடிப்படையிலும் எங்கும் தன்னிச்சையாக தோன்றித்தழைத்திருத்தல் வேண்டும். இயற்கை வழிபாட்டின் ஒரு பிரிவுதான் விலங்கு வழிபாடு. விலங்கு வழிபாட்டின் தலையானது பாம்பு வழிபாடு ஆகும். உலகம் முழுவதும் பாம்பு வழிபாடு சிறப்புற்றுக் காணப்படுகின்றன. குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற இடங்களில் நாக வழிபாடு சிறப்புற்று காணப்படுகின்றன. இந்து சமுதாயத்தோடு நாகமானது இணைந்ததாக காணப்படுகிறது. சிவன் தனது கழுத்தில் பாம்பை அணிந்துள்ளான். விநாயகர் தனது கையில் நாகாபரணம் வைத்துள்ளார். திருமால் ஆதிசேடன் என்ற பாம்பில் துயில்கொள்கிறார் என நம்பப்படுகிறது. நாகமானது இந்துமரபின் குலமரபுச் சின்னமாகவும் காணப்படுகிறது. தென் இந்தியாவின் நாக வழிபாடு அம்மன் வழிபாட்டுடன் இணைந்து காணப்படுகிறது. புற்று வழிபாடும் சிறப்புற்று காணப்படுகின்றன. பெண்களுக்குரிய சிறந்த வழிபாடாக இது விளங்குவதோடு திருமணம், குழந்தை பாக்கியம் போன்றவற்றை வழங்கும் தெய்வமாகவும் பாம்பு காணப்படுகின்றது. இவ் ஆய்வானது உலகம் முழுவதும் பாம்பு வழிபாடானது எவ்வாறு பரவிக்காணப்பட்டுள்ளது. பாம்பு வழிபாடு தோன்றுவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? பாம்பு வழிபாடு இந்து சமுதாயத்தில் எத்தகைய நம்பிக்கைகளை பெற்றுள்ளது? என்பது பற்றி ஆராய்வதாக அமைந்துள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

பாம்பு வழிபாடு இலங்கை, இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதும் பரந்து காணப்படும் வழிபாடாக காணப்படுகிறது. அவ்வாறு பாம்பு வழிபாடு உலகம் முழுவதற்கும் பரந்து காணப்படுவதற்கான காரணம் என்ன? இந்து சமுதாயத்தில் பாம்பு வழிபாடு சிறப்புற்று விளங்குவதற்கான காரணம் என்ன? இவ் வழிபாடு எத்தகைய சிறப்புக்களை பெற்றுள்ளது என்பது பற்றி ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் முறையியல்**

முறையியல் வழி அமையும் தரவுகள் துல்லியத் தன்மையுடைய முடிவுகளைத் தரவல்லவை எனும் வகையில் விளக்கமுறை ஆய்வாகவும் உலகம் முழுவதும் பரவிக் காணப்பட்ட பாம்பு வழிபாடு பற்றி அறியும் போது ஒவ்வொரு இனத்தின் வரலாற்றிலும் பாம்பு வழிபாடு எவ்வாறு சிறந்து விளங்கியுள்ளது என்ற ரீதியில் வரலாற்றியல் ஆய்வாகவும் திகழ்கிறது. ஆய்வின் தேவை கருதி சில இடங்களில் (திராவிடத்தில் காணப்பட்ட பாம்பு வழிபாடு எத்தகையது ஆபிரிக்காவில் காணப்பட்ட பாம்பு வழிபாடு எத்தகையது எனும் ரீதியில்) ஒப்பீட்டு ஆய்வாகவும் விளங்குகிறது.

**ஆய்வினை நியாயித்தல்**

நாக வழிபாடானது இந்து சமுதாயத்தில் சிறப்புற்று விளங்குகிறது. ஆனால் பாம்பு வழிபாடு எனும் ரீதியில் நோக்கும் போது அவை உலக நாடுகளில் சிறப்புற்று விளங்கியிருக்கின்றன. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நாகம் சிறப்புற்று விளங்குவது போன்று ஆபிரிக்காவில் மலைப்பாம்பு வழிபாடு சிறப்புற்று காணப்படுகிறது. மலைப்பாம்பும் அவ் இனத்தார்க்கு பிள்ளை வரம் நல்கும் தெய்வமாகவே கொள்ளப்படுகிறது. பாம்புகள் உலகநாடுகளில் வழிபாட்டிற்குரியதொன்றாக காணப்படுகின்றன. பல சமயங்களில் திராவிட ஆபிரிக்க பாம்பு வழிபாட்டு நம்பிக்கைகள் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகின்ற போக்குடையனவாகவும் காணப்படுகின்றன. இதனடிப்படையில் இவ் ஆய்வு இங்கு அவசியமாகிறது.

**பாம்பு வழிபாடு தோன்றியதற்கான காரணம்**

கடவுள் நம்பிக்கையின் அடிப்படை அன்பும் அச்சமும் இதனைப் போலவே பாம்பு வழிபாட்டின் அடிப்படைகள் அச்சமும் அன்புமே. பண்டைய மனிதன் வாழ்ந்த இடம் மலைக்குகைகளிலும் காடுகளிலுமே. அவனுக்கு அண்மையில் இருந்த கொலையாளி பாம்பே. ஏனைய சிங்கம், புலி, யானை போன்ற உயிரினங்களின் வரவை அவன் பெரும்பாலும் அறிந்து கொள்ள முடியும். சமயத்தில் அவற்றின் தாக்குதலிலிருந்து அவன் தப்பவும் முடியும். வந்த சுவடு தெரியாமல் வாழ்வை முடிப்பது, மீண்டும் தப்பாமல் தீண்டி அழிக்கும் திறன் பாம்பிற்கே உண்டு. எனவே மனிதன் சந்தித்த முதல் உயிரின எதிரி பாம்பே. உயிர்கள் தோன்றிய வரலாற்றில் சிங்கம் புலி முதலிய நடப்பனவற்றிற்கு முன் தோன்றியது ஊரும் இயல்புடைய பாம்பே! எனவே எளிதில் உயிர் பருகும் ஆற்றலுடைய பாம்பு அவனுக்கு பேரச்சத்தை ஊட்டியது. ‘‘பாம்பென்றால் படையும் நடுங்கும்’’ என்ற தமிழ்ப் பழமொழி இதனை வலியுறுத்தும் திராவிட நாட்டில் சில இடங்களில் பாம்பை அடித்துக் கொன்றவுடன் நில்லாது அதனைத் தீயிட்டு எரித்தும் விடுகின்றனர். பாம்பின் எஞ்சிய உடலின் சிறுபகுதி கூட மீண்டும் உயிர் பெற்றுவிடின் அடித்தவனை விடாது தீண்டித் தீர்த்துவிடும் என நம்புகின்றனர். (அறவாணன்,க.ப:1979:23) சிலர் அத்துடன் நில்லாது நாகசாந்தியும் செய்து கொள்கின்றனர் இல்லை எனில் ‘‘சர்ப்ப சாபம்’’ கொன்றவன் குடும்பத்தை அழித்துவிடும் என்று எண்ணுகின்றனர்.

பாம்பு குடியிருப்பதாகக் கருதப்படும், பாம்புப்புற்றை அகற்றுவது கூடப் ‘‘பாவம்’’ என்று மக்களால் கருதப்படும். பாம்புப்புற்றைப் கலைப்போர் பாவியர்; அவர் அழிவர்; முதுமையில் அல்லுறுவர். என்பது திராவிட மக்கள் தம் நம்பிக்கை வீட்டிற்குள்ளோ, வீட்டின் முன்றிலிலோ பாம்பு வந்து விடினும் அதனை அடிக்காது வணங்கிச் ‘‘சென்று விடு’’ என்று வேண்டும் பழக்கம் திராவிடப் பகுதிகளிலும் ஆபிரிக்க நாடுகளில் உள்ளது. ஆக, இவையெல்லாம்

பாம்பு கடித்து விடும் உயிர் போய் விடும் என்ற அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படையாயிற்று என்பதைக் காட்டுவன.

பாம்பை வழிபட்டால் நன்மை செய்யும் தீயன விலகும், நல்லன நிகழும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. இந்நம்பிக்கையை ஒட்டி பல நாட்டுப்புறக் கதைகள் நிலவுகின்றன. இவையன்றிப் பாம்பால் நன்மை என்ற கருத்தும் அறிவியல் அடிப்படையில் மக்களால் அறியப்பட்டிருந்தது. என்று கருத இடமிருக்கிறது வயல்களில் பயிர்களை நாசம் செய்யும் எலிகளைப் பாம்பு பிடித்துத் தின்று வடுவதால், பயிர் உயிர் தப்பும் எனவே பாம்பை உழவனின் தோழன் என்பர். தமிழகத்தில் ‘‘எங்கே பாம்புப் புற்றுள்ளதோ அங்கே கிணற்றை வெட்டு’’ என்று ஒரு பழமொழி வழங்குகிறது. பாம்புப் (புற்று) உள்ள இடத்தில் கிணறு வெட்டினால் நீர் மேலேயே நிரம்ப இருக்கும். உழவிற்கும் தொழிலுக்கும் அது பயன்படும் என்பதை இப்பழமொழி உணர்த்திநிற்கின்றது.

உலகில் எத்தனையோ உயிர்கள் உள்ளன. அவற்றுள் எத்தனையோ மக்களால் வழிபடப்படுகின்றன. ஆனால் அவற்றுள் பாம்பு வழிபாடு மட்டும் தலைமை இடம் பெறுவதற்குக் காரணங்களாவன.

- விரைவாகச் செல்லும் தன்மை
- உடன் தோன்றுவதும் உடன் மறைவதும்
- இடுகாடு, சுடுகாடு, பொந்துள்ள மரம், பழைய சுவர்கள், கரையான் புற்று ஆகிய இடங்களில் வாழ்தல்.
- மலைப்பாம்பின் பாரித்த தோற்றமும், தாக்கும் ஆற்றலும்
- நச்சுப்பாம்புகள் கடித்தலும் விரைவில் நஞ்சு பரவுதலும்
- பிளவுண்ட, அடிக்கடி வெளியே நீட்டப்படும் நீண்ட நாக்கு
- பல்வேறு வகை வண்ணங்கள், வண்ணக் கலப்புகள்
- தோலை உரிக்கும் திறம்
- நூற்றுக் கணக்கில் முட்டையிட்டுக்குஞ்சு பொரித்தல்
- இரட்டைத்தலைப் பாம்புகள் இயல்பாகப் பிறக்கின்றன. மூன்று, ஐந்து, ஏழு ஆயிரம் தலைப்பாம்புகள் என்ற கற்பனைப் பெருக்கத்திற்கு இடம் கொடுத்தது
- கடுங்குளிரையும், கடும் வெயிலையும் தாங்கும் ஆற்றல்
- நிலத்தில் விரைந்து ஓடுவதும், நீரில் விரைந்து நீந்துதலும்
- பாம்பிற்குள்ள இமையா விழிகளும் தொலை நோக்கும்
- வியப்பாக பின்னித் தழுவிக்கொள்ளும் திறம்
- அழகாகப் படம் விரித்தாடுதல்
- விரைவான வளர்ச்சி நீளம்

- நஞ்சை பாய்ச்சும் திறம்

ஆகியன ஏனைய உயிர்களை விட பாம்புகள் சிறந்து விளங்குவதற்கான காரணங்கள் ஆகும். இது போன்ற காரணங்களால் பாம்பு வழிபாடானது உலகம் முழுதும் பரவியிருக்கக்கூடும். பாம்பின் மீது கொண்ட விசேட அச்சத்தால் (அதாவது தனக்கு தீங்கு செய்தோரை தேடி வந்து பழிவாங்கும்) இந்து மக்கள் பாம்பை வழிபடவும் தொடங்கியிருப்பர். பாம்பானது இந்து சமுதாயத்தில் முன்னோர் வழிபாட்டுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. ஆபிரிக்கர் பாம்பை முன்னோராகக் கருதி வழிபடுவர். இந்துக்கள் நாகத்தின் வழித்தோன்றல்கள் என நம்பப்படுவதே நாக வழிபாடு இந்து சமுதாயத்தில் சிறந்தோங்க காரணம் ஆகும். நாகமே அவர்களது குலம் காக்கும் சின்னமாக வரம் கொடுக்கும் தெய்வமாக பாவம் செய்தவர்க்கு தோஷங்கள் மூலம் தீமையைக் கொடுக்கும் தெய்வமாக காணப்படுகிறது. நாக வழிபாட்டின் தோற்றம் பற்றி நோக்குவோமானால் நாக வழிபாட்டின் தோற்றம் குலக்குறியாகும் குலக்குறி வழிபாடே பிற்காலத்தில் நாகம் இந்து சமுதாயத்தில் செல்வாக்கு பெற்று விளங்க காரணமாக அமைந்தது.

சமயத்தின் தோற்றமானது மக்கள் ‘‘புனிதம்’’ சார்ந்தது, புனிதம் சாராதது பற்றிச் சிந்திக்க தொடங்கியதால் ஏற்பட்டது என்பார் துர்க்ஹைம் புனிதமான் ஒன்றைப் பற்றிய ஒருங்கிணைந்த நம்பிக்கைகளும் அவைசார்ந்த நடைமுறைகளுமாக சமயம் திகழ்கிறது. இச்சமய நம்பிக்கைகள் அனைத்தும் குலக்குறி நம்பிக்கையில் இருந்து வளர்ச்சி பெற்றவையாகும்.

சில சமூகத்தினர் தம் குலத்தவர்கள் சில பொருட்களிலிருந்து தோன்றியவர்கள் என்றும், அதனோடு வேறு பல முறைகளில் தொடர்புற்றவர்கள் என்றும் நம்புவதால் அப்பொருள்களை அவர்தம் குலத்தின் குறியாகக் கொண்டுள்ளனர். இவ்வகையான நம்பிக்கையுடையோரின் குலக்குறிகளைத் தொகுத்துப் பார்த்தால் விலங்குகள், தாவரங்கள், இயற்கைப் பொருள்கள் ஆகியவையே முதன்மையாக உள்ளன. ஒவ்வொரு சமூகத்திலும் அச்சமூகத்தவர் குலக்குறியோடு கொண்டுள்ள நம்பிக்கைகள், செயற்பாடுகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக ‘‘குலக்குறியம்’’ என்று கூறப்படும்.

குலக்குறியைக் கொண்ட அனைத்துச் சமூகங்களிலும் சில பொதுப்பண்புகள் காணப்படுகின்றன. அவையாவன,

- குலக்குறி பொதுவாக விலங்காகவோ, தாவரமாகவோ, இயற்கைப் பொருளாகவோ இருக்கும்.
- ஒத்த குலக்குறியோர் அனைவரும் ஒருவழி மரபுடையவராக இருப்பர்.
- குலக்குறியைக் கொண்டுள்ள குழுவினர் அதைத் துணைவன், உறவினர், பாதுகாப்பவர், மூதாதையர் என நம்புவர்.

- ஒவ்வொரு குலத்தவரும் குலக்குறிக்குத் தனிப்பட்ட பெயரோ தனிக்குறியோ வழக்கில் கொண்டிருப்பர். பெரும்பாலும் குலக்குறியின் பெயரையே அக்குழுவினரும் கொண்டிருப்பர்.
- தனி ஒருவருக்கென்று குலக்குறியும் அல்லது குழுவினர் அனைவருக்கும் பொதுவான குலக்குறியும் காணப்படுவதுண்டு.

- குலக்குறியைச் சில நிகழ்ச்சிகள் தவிர பொதுவாக உண்ணவோ கொல்லவோ மறுப்பர்.
- குலக்குறிக்கு முறைப்படியான வழிபாடுகள் செய்வர்.

தொன்மைக் குடியினர் தங்கள் உயிரை விலங்கின் உடலிலோ, தாவரங்களிலோ, இயற்கைப் பொருள்களிலோ வைக்க இயலும் என நம்பினர். அவ்வாறு அவர்களின் உயிரை வேற்றுப் பொருட்களில் வைத்துவிட்டால் அவர்களை எவரும் அழிக்க முடியாது எனவும் அப்பொருள் அழிக்கப்பட்டால் அவர்களும் அழிந்து போவர் எனவும் நம்பினர். தம் சுற்றுச்சூழலிலுள்ள சிறப்பானதொரு பொருளிலேயே அதை வைக்க இயலும் என நம்பியதால் அதைக்குலக்குறியாகக் கொண்டு அதற்குத் தீங்கிழைக்காமலும், கொல்லாமலும், உண்ணாமலும் காத்து வந்தனர் என்பார் வில்கெம் ஸ்மித்.

பாம்பு வழிபாடானது குலக்குறி வழிபாட்டில் இருந்து தோற்றம் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. திராவிடரின் குலக்குறி வழிபாடாகத் தோன்றி நாக வழிபாடானது இந்து சமயம் முழுதும் பரவியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. திராவிடர் ஒரு தெய்வ வழிபாட்டினர் அல்லர் கூட்ட வழிபாட்டினரும் அல்லர். ஒவ்வொரு திராவிடக்குடும்பமும் தனக்கென ஒரு குலதெய்வத்தை கொண்டிருக்கும். அக்குல தெய்வத்தையே சிறப்பாக அவ்வக் குடும்பமும் கொண்டாடும் வட இந்தியா முழுவதையும் ஆரியர் வென்று பரவினபோது அவரே சிவ சமயத்தின் கீழ் எல்லா மக்களையும் கொண்டு வர முயன்றனர். தனிப்பெரும் ஒரே கடவுள் சிவனே என்றனர்.(அறவாணன்,க.ப:1979:41) அப்போது ஆங்காங்குத் திராவிடரிடைப் பரவியிருந்த சிறு தெய்வங்களையெல்லாம் சிவனோடு கதையாகத் தொடர்புபடுத்தி ஓரிணைப்பு ஆக்கினர். இக்காலத்திலேயே தமிழ்க்கடவுள் முருகன், சிவனின் மகனாக்கப்பட்டார். முருகனின் மனைவி வள்ளியோடு வட இந்திய தெய்வயானை இரண்டாவது மனைவி ஆக்கப்பட்டாள். தமிழர்தம் போர்த் தெய்வமாகிய கொற்றவை துர்க்கை ஆக்கப்பட்டு சிவனின் மனைவியாக்கப்பட்டாள். இப்படி இன்னும் பல நடத்துவிக்கப்பட்டன. இந்தியத் திராவிடத் தெய்வங்களை எல்லாம் சிவன் என்ற தனிப்பெரும் ஆரியக்கடவுளின் கீழ் ஒன்றாக்கி அவனது இருப்பிடம் வட இந்தியக் கயிலை என்றாக்கி ஆரியர் அச்சமயங்களின் புரோகிதராய் உயர்ந்தனர்.

இன்று ஆரியராலும் வட இந்தியாவில் பின்பற்றப்படும் வழிபாடு பாம்பு வழிபாடு என்று அழைக்கப்படாமல் நாக வழிபாடு என்று அழைக்கப்படுகிறது. எனவே ஆரியர் இந்தியாவிற்கு வந்தவுடன் இந்தியத் திராவிடப் பாம்பான நாகத்தைக் கண்டனர் என்பதும் ‘‘நாக’’ என்ற சொல்லை ஏற்றனர் என்பதும் உய்த்துணரத்தக்கன.

ஆரியர் இந்தியாவிற்கு வந்தபோது, இந்தியா முழுவதும் திராவிடரே நிரம்பி இருந்தனர். சிந்து வெளிக்கரையில் கறுப்பு நிறமும், கறுப்பு விழியும், கறுப்பு முடியும் கொண்ட மாந்தரைப் பார்த்தேன் என்று எரோட்சு (கி.மு 5ம் நூற்றாண்டு ) எழுதும் குறிப்பு இங்கே நினைவு கூறத்தக்கது.(அறவாணன்,க.ப:1979:144) நாகர் என்ற நாக வழிபாட்டினரும் வடஇந்தியாவில் இருந்தனர். ஆரியர்க்கும் நாகர் முதலான திராவிடர்க்கும் இடையே கடும் போர்கள் நிகழ்ந்தன. இந்திரன் ‘‘**அகி**’’ என்ற நாகரை கொன்றதாக வரும் இருக்கு வேதக்குறிப்பு, ஆரியர்க்கும் நாகர்க்கும் நடுவே நடந்த போரில் நாகர் தோற்றதைக் குறிப்பதாகும் சனமே சயா என்ற ஆரியன் நாகங்களை அழிக்க யாகம் செய்தான் என்ற குறிப்பும் நாகங்களை சுட்டுவதாகும். மகாபாரதத்தில் அர்ச்சுனன் காண்டவ வனத்தில் இருந்த நாகரைதீயிட்டு அழித்ததாக வருவதும் , அர்ச்சுனன் எதிரியான துரியோதனன் (நாகரோ?) நாகக்கொடியும் சின்னமும் உடையவனாக இருப்பதும், அர்சுனனைக் கொன்று தீரவேண்டும் என முடிவு கொண்டு காண்டவ வனத்தினின்று தப்பிய அசுவசேனன் என்ற பாம்பு அர்ச்சுனனின் முதல் எதிரியான கர்ணனிடம் அடைக்கலம் புகுவதும், ஆரிய நாகப் போரைக் காட்டுவனவாம். கேரளாவில் நாககுலத்தினராக வாழும் மன்னார் சாலை மக்கள், தம்முன்னோர் அர்ச்சுனனால் எரிக்கப்பட்ட காண்டவ வனத்தினின்று தப்பிவந்த நாகர் என்பதும் அர்ச்சனன் நாகரை அழித்து விரட்டிய நிகழ்ச்சியை நினைவுபடுத்துகின்றது. அதேபோன்று இலங்கையின் பௌத்த இலக்கியங்களை நோக்கும் போது இங்கும் நாகர் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஈழத்து வரலாற்றிலும் நாகர் பற்றிய குறிப்பு இந்நாட்டிற்கு புத்தர் மேற்கொண்டதாக கருதப்படும் இரண்டு விஜயங்கள் பற்றிய வரலாற்றில் கூறப்படுகின்றது. இச்சான்றுகள் யாவும் இலங்கையிலும் இந்தியாவிலும் ‘‘நாகர்’’ என்ற நாகபாம்பை வழிபடும் மரபினர் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் அவர்கள் நாகத்தை தமது குலகுறியாக கொண்டுள்ளனர் என்பதும் அறிய முடிகிறது. ஆகவே இலங்கை இந்தியாவில் காணப்படும் நாக வழிபாடு குலக்குறி வழிபாட்டின் எச்சமாகும்.

## உலகம் முழுதும் பரவிக்காணப்பட்ட பாம்பு வழிபாடு

பாம்பு வணக்கம் இவ்வுலகம் முழுமையிலும் பரவியிருந்தது. பண்டைய காலத்தில் இவ்வழிபாடு காணப்படாத ஒரு நாடும் இருக்கவில்லை. இவ்வழிபாடு நிலவியதற்கு அறிகுறியாக பல செய்குன்றுகளும், கோயில்களும், மண்மேடுகளும், பிரசின்னங்களும் காணப்படுகின்றன. பாரசீகம், இந்தியா, இலங்கை, சீனா, ஜப்பான், பர்மா, ஜாவா, அராபியா, சிரியா, சின்ன ஆசியா, எகிப்து, எதியோப்பியா, கிரீசு, இத்தாலி, வடமேற்கு ஐரோப்பா, மெக்சிகோ முதலிய நாடுகளில் எல்லாம் பாம்பு அடையாளங்கள்

காணப்படுகின்றன. இவ்வழிபாடுகள் ஒரு நடு இடத்தில் தோன்றிப் பரவியிருத்தல் கூடும். சில நாடுகளில் பாம்பு நல்ல தெய்வமாகவும் சில நாடுகளில் பாம்பு தீய தெய்வமாகவும் கொள்ளப்பட்டது. (கந்தையா,ந.சி:2003:7)

சரித்திரகாலத்தொடக்கத்தில் பாம்பு, பகல் வழிபாடுகள் நன்றாகவே வளர்ச்சியடைந்திருந்தன. பழங்காலத்தில் யூப்பிரட்டிஸ், சிந்து ஆறுகளுக்கிடையில் இவ்வழிபாடுகள் ஓங்கியிருந்தன. (கந்தையா,ந.சி:2003:8). பாபிலோனிலும் அதனை அடுத்த நாடுகளிலும் பண்டை நாடுகளில் ஞாயிறு, பாம்பு வழிபாடுகளே இருந்தன. பாபிலோன் மக்களின் ஆதிக்கடவுளர்களில் ஒருவர் ஈஆ(Ea) . அவர் ஏழுதலைப்பாம்பு வடிவுடையவர். (கந்தையா,ந.சி:2003:9) சாலதிய மக்கள் ஈஆவையும் அவருடைய புதல்வன் மார்துக்கையும் காத்தற் கடவுளாக வழிபட்டனர். ஞாயிறும் பாம்பும் பினீசியரால் வணங்கப்பட்டன. அவர்கள் அவ்வணக்கத்தை பாபிலோனியரிடமிருந்து பெற்று அதனை மற்றைய இடங்களுக்கு கொண்டு சென்றிருக்கலாம். இவ்விரு வணக்கங்களும் சிரியாவிலும் மேற்கு ஆசியாவின் பல பாகங்களிலும் காணப்பட்டன.

கிரேக்கர் ஞாயிற்றையும் பாம்பையும் வணங்கினார்கள். கிகுரோப்ஸ் என்னும் அதேனிய முதல் அரசன் எகிப்திலிருந்து வந்தான் என்பதும் அவன் பாதி பாம்பும் பாதி மானுடனுமாய் இருந்தான் என்பதும் அவர்களது பழங்கதைகளில் காணப்படுகின்றன. (கந்தையா,ந.சி:2003:9) சரித்திர காலத்தில் கிரேக்கரின் ஞாயிற்றும் பாம்பு வழிபாடுகள் வேற வழிபாடுகளுடன் கலந்திருந்தன. ஹெரதோதக(Herodotus) காலத்தில் அதேசின் சுற்றாடல்களைக்காக்கும் கடவுள் ஒரு பெரிய பாம்பாக இருந்தது. ஐரோப்பாவின் எல்லா இடங்களிலும் ஞாயிறு பாம்பு வழிபாடுகள் இருந்தமைக்கு அடையாளங்கள் காணப்படுகின்றன.

உலகத்தின் பழைய நாகரிகங்களுள் ஒன்றாக விளங்கும் எகிப்திய நாகரிகச் சின்னங்களுள் பாம்பு வழிபாடு பற்றிய அரிய குறிப்புகள் பல கிடைத்துள்ளன. எகிப்திய அரசர் தம் அரச சின்னமே படம் எடுத்தாடும் நாகபாம்பு ஆகும். ஆபிரிக்கக் கண்டத்தின் மணிமுடி எகிப்து. பண்டைய நாகரிகப் பகுதிகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது எகிப்து. எகிப்து மக்கள் அரசனை ஆண்டவனாக வணங்கினர். பாம்பை இறந்த அரசனின் ஆவியாக வழிபட்டனர். எகிப்தியர் காணும் உயிரனைத்தையும் வழிபட்ட மாண்பினர் அவர் வணங்கிய உயிர்களுள், பாம்பு தலைமை பெற்றிருந்தது.

நாகபாம்பு வழிபாடு எகிப்தில் மட்டுமே சிறக்க இருந்தது. (அறவாணன்,க.ப:1979:43) எஞ்சிய ஆபிரிக்க நாடுகளில் மலைப்பாம்பு வணக்கமே மிகுதி என்னும் மலைப்பாம்பை மட்டுமன்றி வேறு பிற சிறுசிறு பாம்புகளை ஒட்டியும் பல்வேறு நம்பிக்கைகள் ஆபிரிக்க மக்களிடத்தில் வழங்கின. மலைப்பாம்பு, மண்ணால் ஆன கூரை வேயப்பட்ட குடிசையில் வைத்து வணங்கப்பட்டது. அக்குடிசை நீண்டு குறுகிய கதவற்ற இரண்டு வாசல்களைப்

பெற்றிருக்கும். குடிசையின் உள்ளே சிறுதும் பெரிதுமான மலைப்பாம்புகள் விடப்பட்டு வணங்கப் பெறும். இப்பாம்புகள் தெய்வத்தன்மை பொருந்தியவை என்று கருதப்பட்டன. யாரேனும் தற்செயலாகப் பாம்பைக் கொன்று விட்டால்கூட மரண தண்டனைக்கு உள்ளாக்குவர். மலைப்பாம்பு ஏதேனும் ஒரு குழந்தையைத் தீண்டிவிட்டாலும் கூட அக்குழந்தை பாம்புக் குழந்தையாகக் கருதப்படும். பாம்புக் கோயிலுக்கு அனுப்பப்பட்டு அக்குழந்தை பிற்காலத்து பாம்பு பூசாரி ஆக்கப்படும். பாம்புச்சிலை வழிபாடு கோயில்களில் இருப்பதில்லை. மாறாக உயிர்ப்பாம்பையே வைத்து வழிபடுவர். அழகான பெண்டிர் பாம்பு அடிமையாகத் தம்மை அறிவித்துக் கொண்டு பாம்புக்கோயிலில் கடைசிவரை வாழ்வர். இப்பெண்டிர் புனிதப்பாம்பின் மனைவியராகக் கருதப் பெறுவர்.

இந்தியாவில் பாம்பு வழிபாடு, கன்னியாகுமரி தொடங்கி, காஸ்மீர் வரை பரவியுள்ளது. ஆனால் வட இந்தியாவை விடத் தென்னிந்தியாவிலேயே சிற்றூர் தோறும் மரத்தடி வழிபாடாகவும், பாம்புப்புற்று வழிபாடாகவும் இல்ல வழிபாடாகவும் கோயில் வழிபாடாகவும் அது தழைத்துள்ளது. நாக பஞ்சமி என்ற விழா மட்டுமே இந்தியா முற்றும் பின்பற்றப்படும் பாம்பு வழிபாடாகத் தற்போது இருந்து வருகிறது. எஞ்சிய வழிபாடுகள் அனைத்தும் தென்னிந்தியாவிலேயே மிகுதியாக உள்ளன. பாம்பு வழிபாடு, திராவிடர்க்கே உரிய தாய்த்தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டு, மாரியம்மன் கோயில் புற்று வழிபாடாகவும் மாரியம்மன் சின்னங்களுள் ஒன்றாகவும் பிணைந்துள்ளது. இன்று ஆரியராலும் வட இந்தியாவில் “நாக வழிபாடு” “நாக பஞ்சமி” என்பன பின்பற்றப்பட்டு வருகின்றன.

திராவிட நாகரிகச் சின்னங்களுள் மிகப் பழையதாகக் கருதப்படும் மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்களில் நாக வழிபாட்டுச் சின்னமும் ஒன்றாகும். குறுக்காகக் கால்படித்து அமர்ந்திருக்கும் பக்தர்கள் அவருக்கு வலப்பக்கம் நாகமும் இடப்பக்கம் பட எழுத்தலும் உள்ள முத்திரை நாக வழிபாட்டிற்கு நல்லதொரு சான்றாகும். இது திராவிடங்களில் ஆதி தெய்வமாக நாகவழிபாடு விளங்கியிருக்கிறது என்பதைக் குறிக்கிறது.

அறிய முடியாத பழங்காலந்தொட்டே சீனாவிலும் அதன் அயல் நாடுகளிலும் சூரிய பாம்பு வணக்கங்கள் இருந்து வந்தன. இந்தியாவிலும் மற்றைய இடங்களிலும் காணப்படுதல் போலவே, அது தெய்வமாக்கப்பட்ட முன்னோர் வழிபாட்டோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சீன அரசன் ஞாயிற்றின் புதல்வன் எனப்பட்டான். அவன் உயிரோடு இருக்கும் போது கடவுளுக்குரிய மதிப்பைப் பெற்றான். பாம்பும் ஆமையும் தீட்டிய கொடியால் சீனத் தளபதி அறியப்பட்டான்.சீனரின் பழங்கதைகளில், பழைய அரசரிற் சிலர் பாதி பாம்பு வடிவும், பாதி மனித வடிவுமுடையர். சீனாவின் அரசரின் செங்கோலிலும் பாம்பின் வடிவம் எழுதப்பட்டிருந்தது. வீட்டுத்தளபாடங்களிலும் அவ்வடிவம் வெட்டப்பட்டது. அரண்மனையிலும் எல்லா பாத்திரங்களிலும் அவ்வடிவமே பொறிக்கப்பட்டிருந்தது. கான்பூசியஸ் ஞானியர் பிறந்த போது அவரது உடலை

கழுவும் போது இரண்டு பாம்புகள் கூட இருந்தன என்றும் பழங்கதை உள்ளது. சீனரின் கடவுளாகிய போகி (Fohi)யின் வடிவம் மேலே மனித வடிவமும் கீழே பாம்பு வடிவமும் உள்ளது. (கந்தையா,ந.சி:2003:56)

ஜாவா நாட்டில் பழைய இடிபாடுகள் காணப்படுகின்றன. அங்கு அழிந்து கிடக்கும் கோவில்களில் உள்ள திருவுருவங்கள் பாம்பு ஆபரணங்கள் அணிந்திருக்கின்றன. சில திருவுருவங்களின் கைவளை சுருண்டு வளைந்த பாம்பாக அமைந்துள்ளது. அவைகளின் அரைக்கச்சும் பாம்பே.

மஞ்சூரிய மக்கள் சூரிய வம்சத்தினர். அவர்களுடைய பாம்புத்தெய்வங்கள் இன்றும் ஆறுகளுக்கும் மழைக்கும் அதிபதிகள். கொரியா நாட்டு அரசரும் சூரிய வம்சத்தினர். அவர்களை பாம்பு கடவுள் காக்கின்றது. மக்கள் பாம்புகளை குலதெய்வங்களாக வணங்குகின்றனர்.

ஜப்பானியரின் சூரியக்கடவுள் பெண் தெய்வமாகும். ஜப்பானியரின் அரசர் சூரியக்கடவுளின் புதல்வர் என நம்பி வருகின்றனர். ஜப்பானிய ஐதீகத்தின்படி அவர்களுடைய மலைக்கடவுளர் பாம்பு வடிவத்தை எடுத்துள்ளார். இந்நாடுகளில் சூரிய பாம்பு வழிபாடுகள் இந்தியாவிற் காணப்படுவதை ஒத்தன. தொடக்கததில் ஜப்பானியர் பாம்பை வழிபட்டனர் என தெரியவருகிறது. அவர்களது உடை, ஆயுதம், கத்தி வீட்டுத்தளபாடம் போன்றவற்றில் பாம்பு வடிவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

வட அமெரிக்க இந்தியர் பாம்புகளை மழை, மின்னல், இடி போன்றவற்றுடன் இணைத்துப் பேசினர். அரிசோனா (Arezona) என்ற வட அமெரிக்கப் பகுதியில் கோபி (Hopi) எனும் இந்தியர் வாழுகின்றனர். இவர் ஆடும் மழையாட்டம் உலகப்புகழ் பெற்றது. பாம்புகளை மையமாக வைத்து இவ் ஆட்டம் ஆடப்படும். மழை பொழிதற்காகப் பாம்புகளை தூதாக விடுவது இவ்வாட்டத்தின் அடிப்படை மாயா கலைப்பணிகளில் பாம்புருவங்கள் இடம்பெற்றிருந்தன. நடு அமெரிக்கா, மெக்சிக்கோ ஆகிய இடங்களில் பானைகளில் பாம்புருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

கம்போடியாவில் நகோன்வாட் (Nakhonvat) என்ற கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் முற்றுமாக ஒரு பாம்புக் கோயிலாகும். இக்கோயிலின் கூரை எங்கனும் ஏழுதலைப்பாம்புருவங்கள் நூற்றுக்கணக்கில் வரையப்பட்டுள்ளன. கோயிலில் மூலை முடுக்கு எங்கும் பாம்பு, பாம்பு, பாம்பே! அறுநூறு அடி சதுரத்தில் நூற்றெண்பது அடி உயரத்தில் அமைக்கப்பட்ட அக்கோயிலில் பார்க்கும் இடமெல்லாம் பாம்பு உருவமே. தனியே பாம்பிற்கெனக் கருவறை இல்லை. கோயில் முழுவதும் கருவறைதான்! இக்கோயிலை

முதலில் கண்டறிந்து முதலில் உலகிற்கு அறிவித்த பெருமைக்குரியவர் பிரான்சு அறிஞர் எம். முகோ (M.Mouhot) என்பவராவார்.

இந்திய வட எல்லையில் இருக்கும் நேபாளம் தனிநாடு, இந்தியச் சமயங்களும் நம்பிக்கைகளும் இடம்பெற்றுள்ள நாடு. இந்நாட்டினர் பாம்பு வழிபாட்டினர் ஆனி மாதத்தில் தேய்பிறை காலத்து ஐந்தாம் நாளன்று நாக பஞ்சமி விழாவை கொண்டாடுவர். அங்கு நாராயண் என்ற இடத்தில் இவ்விழா சிறப்புறக் கொண்டாடப்படும் அவ்விடத்தில் வைணவத் திருமாலுடன் தொடர்புடைய கருடனின் உருவமும் அங்கே உள்ளது. விழா நாளன்று கருடனின் மேலிருந்து வியர்வை கசியுமாம். கசியும் வியர்வையை மதகுரு சிறு துணியால் துடைப்பார். துடைத்ததனை நாட்டு அரசனுக்கு விடுப்பர் அத்துணியின் சிற்றிலை கூட பாம்புக்கடிக்கு மாற்று மருந்து என்பது அன்னார் நம்பிக்கை. நீரோடைகள் இரண்டு கூடுமிடத்து முறைப்படி நாகபூசை நடத்துவர். தமக்கு பயிர் விளைச்சலுக்கு நல்வாழ்வு வழங்க வேண்டும் என நாகவேந்தனை வேண்டிக்கொள்வர்.

மேற்குறிப்பிட்ட உலக நாடுகளின் வரலாறுகள் பாம்பு வழிபாடானது உலகம் முழுதும் செல்வாக்கு பெற்றிருந்ததை அறிய முடிகிறது. இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் நாக வழிபாடு செல்வாக்கு பெற்று விளங்குவது போல் ஆபிரிக்காவில் மலைப்பாம்பு வழிபாடு சிறந்து விளங்குகிறது. வேறு வகை பாம்புகளும் ஆபிரிக்காவில் செல்வாக்கு பெற்றுள்ளன. இது பாம்பு வழிபாடுகள் உலகம் முழுவதும் இடம்பெற்றிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

## இந்து சமுதாயத்தில் பாம்பு சார்ந்த நம்பிக்கைகள்

நாகத்தை வணங்கத்தக்க உயிரினமாக மக்கள் கருதுவதால், தம் வீடுகளுக்குள் பாம்பு வந்து விடும் போது அதனை அடிக்காது, வணங்கி வெளியேறுமாறு வேண்டுவர். பாம்பைக் கண்டவுடன் வணங்குவர். நெய் விளக்கை ஏற்றுவர் ஆர்த்தி எடுப்பர். தேவதைகளின் பெயரைக் கூறுவர். எவ்வாறான நேர்த்திக்கடன்களை செய்வதாக நாகர் முன் வேண்டிக் கொள்வர். இன்னும் சில இடங்களில் பாலைக் கிண்ணம் ஒன்றில் ஊற்றி நாகத்தின் முன் வைத்து, ‘‘நாக! நாக! போய்விடு’’ என வேண்டுவர்.

சில இடங்களில் பால், பழம் ஆகியவற்றைப் பாம்பின் முன் வைத்து கற்பூரம் ஏற்றி வணங்குவர். சிறந்த பால் பழங்களுடன் முட்டைகளையும் முன்வைப்பர். பாம்பிற்கு முட்டையும் பாலும் வைப்பது பாம்பின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காகவே என அறிவியல் ரீதியில் கருதப்படுகின்றது. பாம்புகள் இயற்கையாகவே அதிக குட்டிகளை இனம் பெருக்கும் வல்லமை படைத்தவை. இந் நிலையில் பூமியில் அதிக பாம்புகளை இனம் பெருக்குவதால் அவை மனிதனுக்கு கடித்து தீங்கு செய்யவும் வாய்ப்புண்டு அதனால் பாம்புகளுக்கு

வழிபாட்டின் மூலம் முட்டையும் பாலும் வைப்பது அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கென அறிவியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தவிர்க்க முடியாச் சூழலில் நாகபாம்பை அடித்துக் கொன்றுவிட நேரின் அதற்காக வருந்துவர். பாம்பு தம் குலத்திற்குத் தீங்குதரும் என அஞ்சுவர். தமக்கு ஆண் சந்ததி அற்றுப்போகும் பாம்புச் சாபம் பல தலைமுறை தொடரும் என்று கருதுவர். எனவே அடித்த பாம்பை தெருவிலோ பிற இடங்களிலோ எறியாது அதனை உரியமுறையில் சடங்குகளில் மனிதனைப் புதைப்பது போல் புதைப்பர்.

இறந்த பாம்பைத் துணியால் எடுப்பர். குழி தோண்டுவர். அக்குழியில் பால் நெய் இவற்றை ஊற்றுவர் பின்னர் பாம்பைக்குழியில் இட்டு மண்ணால்மூடி அடக்கம் செய்வர். சிலர் மனிதர்களுக்கு செய்தலைப் போலச் சடங்குகளைச் செய்த பின்பும் மன ஆறுதல் கொள்ளாத நாக சாபம் நீங்குவதற்காக, நாகசாந்தி செய்து கொள்வார். நாகசாந்தி என்பது நாகம் போன்ற உருவத்தை பஞ்சலோகத்திலே வெள்ளியிலோ செய்து அதற்கு பாலாபிடேகம் செய்வர். தீ வளர்த்து வேள்வி செய்வர். அன்று அந்தணர்க்கு விருந்தளித்து புதுவேண்டி, துண்டுகளை வாங்கிக் கொடுப்பர். அன்று புற்றுகளுக்கு பால் ஊற்றுவர். இச்சடங்குகளை பெரும்பாலும் ஆற்றங்கரையோரங்களில் செய்வார்.

சிலர் வீடுகளிலும் நாக உருவை எழுதி வழிபாடு மேற்கொள்கின்றனர். வீட்டுச் சுவரில் மஞ்சள் பூசி, அதன் மேல் குங்குமத்தால் பாம்பு உருவத்தை வரைந்து வணங்குவர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் தம்வீட்டிலுள்ள நாக உருவத்தின் முன் நாக பூசை செய்வர். இவ்வாறு வீட்டில் நாகத்தை வழிபாடு செய்யும் முறை மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. பொதுவாக நாக வழிபாடு ஆலயங்களிலும் அரசமரத்தடிகளிலும் வேப்ப மரத்தடியிலும் ஆற்றோரங்களிலும் இடம்பெறுகின்றன. மற்றும் பாம்பின் உறைவிடமாக கருதப்படும் புற்றுகளிற்கும் மக்கள் வழிபாடு மேற்கொள்வர். மரத்தடியில் உள்ள நாகசிலைக்கு நீராய் அல்லது பாலால் அபிடேகம் செய்து சிலையின் மீது மஞ்சள் பூசி குங்குமம் வைத்து தம்பை அவித்துப் பூசனைப் பொருளாக படைப்பர். பால் முட்டை ஆகியவற்றை சிலையின் முன்வைத்து தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி தரையில் விழுந்து எண்சாண் உடம்பும் நிலத்தைத் தீண்ட வணங்குவர். பின்னர் நாக சிலையையும் அது இருக்கும் மரத்தையும் சூழ்ந்து 3 முறை அல்லது ஒன்பது முறை அல்லது பன்முறை வலம் வருவர்.

நாட்டுப்புற வழக்கில் நாகமானது மக்களுக்கு திருமணபாக்கியம் கொடுக்கும் தெய்வமாகவும் குழந்தை பாக்கியம் கொடுக்கும் தெய்வமாகவும் காணப்படுகிறது. இவ் வழிபாடானது பின்வரும் மூன்று விதங்களில் காணப்படுகிறது.

- புற்றிலுள்ள பாம்பினை வழிபடல்

 

- பாம்பு உருவம் பொறித்த நடுகல்லினை வழிபடல்
- புற்றின் அடியாக இருக்கும் மாரியம்மனை வழிபடல்

**புற்றிலுள்ள பாம்பினை வழிபடல்**

நாக வழிபாட்டில் புற்று வழிபாட்டிற்கு தனிச்சிறப்பிடம் உண்டு. பாம்புப்புற்றை மஞ்சள், சந்தனம், குங்குமம் ஆகியவற்றால் அலங்கரித்து உரிய நிவேதனம் படைத்து பாம்புப்புற்றுக்குள் பாலூற்றி நாகராஜாவை வழிபடுவர். நாகத்தை முறைப்படி வழிபட்டால் குடும்பத்தில் வளமும் அதிஸ்டமும் பெருகும் என்பது நம்பிக்கை புத்திரப்பேறு வேண்டிப்பிரார்த்திக்கும் பெண்கள் விரதமிருந்து அரச மரத்தை 108 முறை வலம்வருவர். சில பெண்கள் புற்றுக்கு முன்பாக பொங்கலிட்டு படைப்பதுமுண்டு. தங்களது வேண்டுதல் நிறைவேற பிரார்த்தித்து மஞ்சள் நிற எலுமிச்சையை புற்றின் மீது வைக்கும் வழக்கமும் உள்ளது.

**பாம்பு உருவம் பொறித்த நடுகல்லினை வழிபடுதல்**

பாம்பு உருவம் பொறித்த நடுகற்கள் ஆற்றங்கரை, குளக்கரை தோறும் மரத்தடியில் காணப்படுகின்றன. நீர்நிலையிலே நீராடி அவற்றின் கரையிலே நாகத்தின் சிலைகளை வைத்து தொடர்ந்து நாற்பது நாட்களுக்கு அவற்றுக்கு அபிஷேகம் செய்து அலங்கரித்து வழிபடுதல் மூலம் பெண்கள் மலட்டுத்தன்மை நீங்கும் என்ற நம்பிக்கை உண்டு. இவ்வாறு அனுஷ்டிக்கும் வழிபாட்டின் மூலம் மகப்பேறு கிடைத்ததும் அதற்கான பிராயிச்சித்தமாக ஒரு நாகசிலையை நாகங்கள் காணப்படும் ஆற்றோரங்களிலும் மரங்களிலும் கீழும் சேர்க்கும் வழக்கம் உண்டு. இவ்வாறு நேர்த்திக்கடனுடன் மேற்கொள்ளுதல் நாகபூசை அஸ்வமேதம், புத்திரகாமேஸ்டி போன்ற யாகங்களுக்கு சமனானது என்ற நம்பிக்கையும் உண்டு. இவற்றைவிட நேர்த்திக்கடனாக நாகசிலைகளை ஆலயங்களுக்கு அளிக்கும் வழக்கமும் காணப்படுகின்றது.

**புற்றின் அடியாக இருக்கும் மாரியம்மனை வழிபடுதல்**

இங்குள்ள புற்றினையும் மாரியம்மனையும் ஒன்றாகவே கருதுகின்றனர். இந்தியாவிலுள்ள புற்றடி மாரியம்மன், திருமுல்லை வாயில் புற்றடி மாரியம்மன், வேட்டங்குடி புற்றடி மாரியம்மன், போன்ற கோயில்கள் குறிப்பிடத்தக்கன. இக்கோயிலில் பிள்ளைவரம் வேண்டுவோர். தொட்டில் கட்டுதல், பாவை வாங்கி இடுதல் முதலிய கடன்களைச் செய்கின்றனர்.

நாகபாம்பு குழந்தை வரத்தை நல்குகின்றது என்ற நம்பிக்கை இந்து மக்களிடையே அதிகம் நம்பப்படுகிறது. இந்து மக்கள் நாகபாம்பையே குழந்தை வரம் கொடுக்கும் தெய்வமாகக் கருதுகின்றனர். இதே வழிபாடு ஆபிரிக்க மக்களிடமும் காணப்படுகின்றன.

ஆபிரிக்க மக்கள் மலைப்பாம்பை குழந்தை வரம் கொடுக்கும் தெய்வமாக கருதுகின்றனர். பொதுவாக நாகத்தை வழிபடுவதற்காக திராவிடர்கள் கொண்ட நம்பிக்கைகளாவன.

- மலட்டுத் தன்மை நீங்கிக் குழந்தை பிறக்கும்
- வறட்சி நீங்கி மழைபொழியும், வளம் பெருகும்
- நோய் அகலும் என்பதாகும்.

இந்த நம்பிக்கை ஆபிரிக்க நாட்டு மக்களிடம் உள்ள மலைப்பாம்பு நம்பிக்கையுடனும் ஒத்துக் காணப்படுகிறது.

குழந்தை இல்லாத பெற்றோர் பாம்பைத் தொடர்ந்து வழிபட்டு வருவாரெனில் பாம்பினருளால் குழந்தைப்பேறு எய்தப்பெறுவர் என்று நம்பப்படுகின்றது. இந்நம்பிக்கை ஆபிரிக்கரிடையேயும் திராவிடரிடையேயும் பரவியுள்ளது. தென் உகாண்டாவில் வாழும், புது (Budu) என்ற பெயருடைய மக்கள், குழந்தைப் பேற்றிற்காக மலைப்பாம்பை வழிபடுவர். ஏழு நாட்கள் தொடர்ந்து சில சடங்குகளை மலைப்பாம்பின் கோயிலின் கண் செய்கின்றனர் இவ்வாறு நேர்த்திக்கடனை முறைப்படி நிகழ்த்த குழந்தை பிறக்கும் என நம்புவர். அவ்வாறு குழந்தை பிறந்த பின் மலைப்பாம்பு கோவிலில் வேண்டிக்கொண்டபடி உரிய நேர்த்திகளை தவறாது செய்வர். அவ்வாறு நேர்த்தி செய்யத் தவறினால் பிறந்த குழந்தை நோய்வாய்ப்படும் அல்லது இறந்துவிடும் என்பது நம்பிக்கையாகும். இந்நம்பிக்கை இந்துக்களிடையேயும் பரவலாகக் காணப்படுகின்றன. (அறவாணன்,க.ப:1979:102)

புற்றுகளுக்கு விசேட நாட்களில் பால் ஊற்றி வழிபாடு செய்வர். குறிப்பாக நாகசதுர்த்தி நாளன்று அவித்த கம்பை புற்றருகில் வைத்து படைத்து அத்துடன் விசேட பூசைகளும் செய்து வழிபடுவர். நாக வழிபாட்டுக்குரிய விசேட தினங்களாக நாக பஞ்சமி, நாக சதுர்த்தி என்பன காணப்படுகின்றன. ஆடி மாதம் வளர்பிறை சதுர்த்தி நாக சதுர்த்தியாகவும், வளர்பிறை பஞ்சமி நாக பஞ்சமியாகவும் கொண்டாடப்படுகிறது.

பாம்பென்றால் படையும் நடுங்கும் அதே போல பாம்பு கிருகங்களான ராகு, கேது தோஷத்தினால் பலவித தடைகள் ஏற்படுகின்றன. நாக பஞ்சமி நாளில் விரதமிருந்து நாக தெய்வத்தை வழிபட தோஷம் விலகி திருமணம் நடைபெறும், கணவன் ஆயுள் அதிகரிக்கும், புத்திர பாக்கியம் கிடைக்கும், தடைப்பட்ட காரியம் தடையில்லாமல் நிறைவேறும் எதிர்பார்த்த வேலை கிடைக்கும் என்பது நம்பிக்கை. இது தொடர்பாக ஒரு புராணக்கதையும் காணப்படுகிறது. பிரம்ம தேவரின் மகனான கஷ்யப்பருக்கு நான்கு மனைவிகள். அவர்களில், கத்ரி என்பவரிடத்தில் பிறந்தவர் நாகர், தாய் சொல்லைக் கேட்காததால் தீயில் விழுந்து இறக்கும்படி தாய் கத்ரி சாபம் கொடுத்தாள். அந்த சாபத்தினால் பல நாகங்கள் மன்னன் ஜனமேயன் நடத்திய சர்ப்ப யாகத்தின் போது அக்கினியில் விழுந்து இறந்தன. அஸ்தீகர், ஜனமேயனது யாகத்தை தடுத்து, நாகங்களுக்கு சாப நிவர்த்தி கொடுத்தார். அவ்வாறு சாபநிவர்த்தி பெற்ற நாள்தான் இந்த நாக பஞ்சமி தினம்.

சிலருடைய யாகத்தில் நாகதோஷம் இருக்கும் இத்தோஷத்தினால் திருமணத்தடை, புத்திரபாக்கியம் அற்றதன்மை காணப்படும். அத்தகையோர் நாக சதுர்த்தி, நாக பஞ்சமி விரதங்கள் கடைப்பிடிப்பதன் மூலம் தடைகள் நீங்கி திருமணம் நடைபெற்று புத்திரபாக்கியம் கிட்டுப் பெறுவர். நாக சதுர்த்தி நாளன்று நாகராஜருக்கு விரதம் இருந்த பால், தேன் போன்றவற்றால் அபிடேகம் செய்து பூக்களால் அர்ச்சனை செய்து பால், பாயாசம் நிவேதனம் செய்து வழிபடுவர்.

பாம்பை வழிபட்டால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை தமிழகத்தில் இருப்பது போல ஆபிரிக்காவிலும் உள்ளமையை சான்றுகள் உறுதி செய்கின்றன. இவை மட்டுமன்றி புனித மரங்களை சுற்றி வந்தால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை மேற்கு ஆபிரிக்காவிலும் திராவிட மாநிலங்களிலும் ஒத்துள்ளது. திராவிடப் பெண்டிர் அரச மரத்தடியைச் குழந்தை வேண்டிச் சுற்றி வருவர். மேற்கு ஆபிரிக்கப் பெண்டிர் ‘‘பாம்’’ போன்ற மரங்களை குழந்தை வரம் வேண்டிச் சுற்றி வருகின்றனர்.

பாம்பே மனிதனுக்கு கருவுறுதலுக்கு மூலமான ஆண், பெண் உறவை முதன்முதலாக சொல்லிக் கொடுத்தது என்ற நம்பிக்கை ஆபிரிக்கரிடையே உள்ளது. அசாந்தி (Ashanti) இன மக்களிடையே இது தொடர்பாக ஒரு கதை வழங்குகிறது.

கடவுள் நஞ்சில்லாத மலைப்பாம்பு ஒன்றை அனுப்பினார். அம்மலைப்பாம்பு வீட்டையும் ஆற்றையும் உண்டாக்கியது. பாம்புடன் கடவுள் ஓர் ஆணையும் பெண்ணையும் அனுப்பி இருந்தார். தொடக்கத்தில் அவ்விருவருக்கும் குழந்தை இல்லை. குழந்தை பெறும்முறை அவர்களுக்குத் தெரியாமல் இருந்ததே காரணம். பாம்பே குழந்தை பெறும் முறையை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தது. மனிதர்களைப் பார்த்து உங்களுக்கு குழந்தைகள் உள்ளனவா என்று கேட்டது. அவர்கள் தங்களுக்கு குழந்தைகள் இல்லை என்றனர். உடன் பாம்பு ‘‘குழந்தை பெறும் வழியை நான் சொல்லித்தருவேன்’’ என்றது. அவ்விருவரையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்குமாறு நெருங்கி நிற்கப்பணித்தது. உடனே ஆற்றுக்குள் மூழ்கிவிட்டது. சற்று நேரம் கழித்து வாய் நிறையத் தண்ணீருடன் பாம்பு இவரிடையே வந்தது. தண்ணீரை அவ்விருவர் வயிற்றிலும் ‘‘கூசு கூசு’’ என்று ஒலி எழுப்பித் தெளித்தது. (கூசு என்ற சொல் ஆண் பெண் உறவைக் குறிக்கும் கூடு என்ற திராவிடச் சொல்லை ஒத்துள்ளது.) பின்னர் அவர்களை வீட்டிற்குள் ஒன்றாக படுத்துறங்குமாறு கூறிவிட்டு பாம்பு விடை பெற்றது. அதன் பின் அவர்களுக்கு குழந்தைகள் பிறந்தன. (அறவாணன்,க.ப:1979:105) கிறிஸ்தவ வேதாகமத்தின் பாம்பு வழிபாட்டின் எதிரொலி காணப்படுகிறது. இதன்படி முதல் மன்னனாகிய ஆதாரமுக்கும் முதல் பெண்ணாகிய ஒவாளுக்கும் முன்னே ஈடன் தோட்டத்தில் சாத்தான் பாம்பாகத் தோன்றுவதாக பழைய ஏற்பாடு கூறும். இதன்படி இயேசுவானவர் முதன்முதல் படைத்த உலகம் புனிதமானது ஆண் பெண் உறவில் மாசு அற்றது காமம் அற்றது சாத்தானே பாம்பாக வந்து விலக்கப்பட்ட கனியை புசிக்கும்படி ஏவாளின் மனதை

மாற்றி ஆண் பெண் உறவை உலகிற்கு கொண்டு வந்தான். உலகில் பாவத்தைப் புகுத்தினான் என்ற பாம்பு வழிபாட்டின் எதிரொலி காணப்படுகிறது.

நாக வழிபாடு நோய் தீர்க்கும் என்ற நம்பிக்கை திராவிட மாநிலங்களில் பரவலாக காணப்படுகிறது. குறிப்பாக நாகர் கோவிலில் உள்ள நாகராசாவை வழிபாட்டால் தீராத நோயும் தீர்ந்துவிடும். களக்காட்டு அரசனே, இவ்வாறு நாகராசாவைத் தொடர்ந்து வணங்கி நோய் நீங்கப் பெற்றான் என்று நம்பப்படுகிறது. கண்குருடும் நாக வணக்கத்தால் அகன்றுவிடும் என்று குமரி மாவட்டத்தார் நம்புவர். பாம்புப்புற்று வழிபாட்டிடங்களில், பாம்புப்புற்று மண்ணைப் பிரசாதமாக எடுத்து வாயில் இட்டு, நெற்றியில் அணிந்து கொண்டால் பற்றியிருக்கும் நோயனைத்தும் பறந்துவிடும் என்று தமிழ்மக்கள் நம்புவர்.

பாம்புகள் நிலத்தை வளப்படுத்தும், கால் நடைகளை நலப்படுத்தலும் என்பது திராவிட மக்கள் தம் பொதுவான நம்பிக்கை. இந்தியாவிலும், திராவிட மாநிலங்களிலும் நாக வழிபாடு ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் நிகழுவது நினைவு கூர்தற்குரியது. தமிழகத்தின் ஆடி மாதம், பயிர்களுக்குரிய விதையிடுங் காலமாகும். ஆடிப்பட்டம் தேடிவிதை என்பது பழமொழி. ஏறத்தாள ஆனி ஆடியிலேயே தமிழக ஆறுகளில் தண்ணீர் வரும், நீர் நிலைகள் நிறையும், நன்செய், புன் செய்ப்பயிர்ப்பணிகள் தொடங்கப்படும். இக்காலத்தில் நாகவழிபாடு நடப்பது, பயிர் வளத்தோடு தொடர்புபடுத்த வைக்கிறது. பாம்பு வழிபாடு தொழில் வளத்தையும் நல்குகிறது என நம்பப்படுகிறது. போன்றவை நாகம் சார்ந்து இந்து மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளாக காணப்படுகின்றன.

## முடிவுகளும் பரிந்துரைகளும்

விலங்கு வழிபாட்டில் தலைபெற்று பாம்பு வழிபாடானது காணப்படுகின்றது. இயல்பாகவே பாம்புகள் அதிக இனப்பெருக்கம் செய்ய வல்லன. அதனாலேயே பாம்புகள் குழந்தை பாக்கியமும் திருமணமும் வேண்டி வழிபடும் தெய்வமாகக் காணப்படுகின்றன. பாம்பை அடிக்கக் கூடாது என்ற நம்பிக்கை இந்து மக்களிடம் பரவலாகக் காணப்படும் செய்தியாகும். அவ்வாறு ஒருவர் அடித்தால் அது நாக தோஷமாக அவருடைய வாழ்வில் மாறிவிடும் என்பது நம்பிக்கை ஆகும். இதனாலேயே அவர்களுக்கு திருமணத்தடை திருமணம் ஆன தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் அற்ற தன்மை காணப்படுகின்றது.

அத்தகைய தோஷம் இருப்பவர்கள் நாக வழிபாடு செய்வதன் மூலம் தமது தோஷம் நீங்கி நல்வாழ்வு பெறுவர். இயல்பாகவே பாம்பு பழிவாங்கும் தன்மையுடையது தனக்குத் தீங்கு செய்தவரை அது தேடி வந்து பழிவாங்கும். அவ்வாறே தனக்கு தீமை செய்தவருக்கு தோஷமாக மாறியும் அல்லல்படுத்தும். அதனாலேயன்றோ எமது முன்னோர் பாம்பை வழிபடு பொருளாக்கி அதற்கு வழிபாடுகள் செய்வதன் மூலம் அதன் மனதை அமைதியாக்கி விடலாம் தாம் நல்வாழ்வு பெறலாம் என சிந்தித்தனர் போலும் ஏனெனில் உலகில் உள்ள ஏனைய உயிரினங்களைவிட பாம்பே அதிகம் வழிவாங்கும் திறன் கொண்டதாகும்.

ஒன்று பாம்பு பழிவாங்கும் என்ற அச்சத்தினால் பாம்பு வழிபாடுகள் தோன்றியிருக்கலாம். அல்லது பாம்புகள் தாம் குட்டியீன்றி இனம் பெருகி வாழ்வது போன்று மக்கள் தாமும் வாழ ஆசைப்பட்டிருக்கலாம். அதனால் பாம்பைத் தாம் வணங்கினால் தமக்கும் அதே பேறு கிட்டும் என்ற நம்பிக்கையில் பாம்பு வழிபாடுகள் உருவாகியிருக்கலாம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமன்றி உலகத்தில் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படாத இடங்களிலும் பாம்பு வழிபாடு காணப்படுவது வியப்பிற்குரிய ஒன்றாகும்.

## உசாத்துணைகள்


அறவாணன், க.ப., (1979), **பாம்பு வழிபாடு திராவிட ஆபிரிக்க ஒப்பீடு**, தமிழ் பதிப்பகம்.

அறிவுடைய நம்பி, ம.சா., (2010), **தமிழக நாட்டு புறவியல் ஆய்வுகள்**, நியூ செஞ்சரி புக்கவுஸ் (பி) லிமிடெட்.

கந்தையா, ந.சி.,(1950), மறைந்த நாகரிகங்கள், தமிழ்மண் பதிப்பகம்.

கந்தையா, ந.சி., (2003), **மனிதன் எப்படித் தோன்றினான்**, அமிழ்தம் பதிப்பகம்.

கந்தையா, ந.சி., (2004), **வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்**, தமிழ் மண் பதிப்பகம்.

குணராசா, க., (1996), ஈழத்தவர் வரலாறு, பூபாலசிங்கம் பதிப்பகம்.

சிற்றம்பலம், சி.க., (1983), ''**பண்டைய ஈழத்து யக்ஷ நாக வழிபாடுகள்**'', சிந்தனை, தொகுதி1, (புதிய தொடர் இதழ் 11 ஆடி 1983).

சிவ தியாகராஜா, (2008), **தமிழ் மக்களும் தழுவிய மதங்களும்**, மணிமேகலைப் பிரசுரம்.

தவரத்தினம், தி., (ப.ஆ)., (2015), **"ஈழத்தில் நாக வழிபாடு"**, சர்வசக்தீவெளியீடு, சடையாளி காரைநகர்.

பக்தவத்சல பாரதி, (2005), **மானிடவியல் கோட்பாடுகள்**, அடையாளம் பிரஸ், இந்தியா.